# பாலியல் தாக்குதலில் (Sexual Assault) இருந்து பிழைத்து வாழ்வோருக்கான ஒரு வழிகாட்டி

அன்பான பிழைத்து வாழ்பவரே,

உங்களுக்கு இது மிகவும் கஷ்டமான நேரமென்பதை நாங்கள் உணர்கின்றோம். உதவி மற்றும் ஆதரவை வழங்குவதற்காக, ரொறன்ரோ காவல்துறையினர் (TPS) இங்கே உள்ளனர் என்பதை நீங்கள் அறிந்திருப்பது அவசியமாகும்.

பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட அனைவரும் மரியாதையுடனும், கௌரவத்துடனும், நியாயமாகவும், கண்ணியத்துடனும், தொழில்சார் தகமையுடனும், பாகுபாடற்ற முறையிலும் நடத்தப்பட வேண்டுமென்பதில் TPS உறுதியாகவுள்ளது.

உங்களுக்கு உதவி செய்வதற்குத் தேவையான தகவல்கள் மற்றும் ஆதாரங்களை வழங்குகின்ற அதே நேரத்தில், தொழில்சார் தகமைமிக்க, முழுமையான விசாரணை ஒன்றை நடத்துவதன் மூலம் இந்த விடயத்துக்குப் பொருத்தமானதொரு தீர்வை வழங்குவதே எங்களுடைய கடமையாகும்.

இந்த வழிகாட்டியை அணுகல் மற்றும்/அல்லது எங்களுடைய வலைத்தளத்தில் தகவலைத் தேடல் மூலம், பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட ஒருவர் என்ற வகையில் நீங்கள் முக்கியமானதொரு படிமுறையை எடுத்துள்ளீர்கள். இணைக்கப்பட்டுள்ள இந்த ஆதார வழிகாட்டியில் பாலியல் தாக்குதல் புலன்விசாரணைகள், சாத்தியமான விளைவுகள் மற்றும் குற்றவியல் நீதிமன்ற நடைமுறைகள் பற்றிய தகவல்கள் உள்ளன. ரொறன்ரோவிலுள்ள, நிதி இழப்பை ஈடுசெய்யும் திட்டங்கள், தொழில்சார் தகமையுள்ள ஆற்றுப்படுத்துகை, மற்றும் ஆதரவுகளை அணுகும் முறைகள் பற்றிய தகவல்களையும் நாங்கள் இதில் இணைத்துள்ளோம்.

காவல்துறையினருக்கு அறிவிப்பதற்கு நீங்கள் விரும்பாவிட்டால் அல்லது முடிவெடுப்பதற்கு உங்களுக்குக் காலமும் ஆதரவும் தேவைப்பட்டால், இந்தக் கஷ்டமான நேரத்தின்போது உங்களுக்கு உதவக்கூடிய, வேறு பல முகவர் நிலையங்கள் எங்களுடன் பங்குதாராக இருக்கின்றனர். இந்த முகவர் நிலையங்கள் மற்றும் அவற்றினது தொடர்புத் தகவல்கள் கொண்ட பட்டியலொன்று இந்தக் கையேட்டின் பின்பக்கத்தில் உள்ளது.

இதற்குப் பொறுப்பானவரை/பொறுப்பானவர்களை இனம்கண்டு, கைது செய்து, வழக்குத் தொடர்வதே எங்களுடைய நோக்கமாகும். அதே நேரத்தில், பிழைத்து வாழ்பவர் என்ற வகையில், இந்த நடைமுறைகளில் உங்களுக்குச் சிறந்தது என நீங்கள் தெரிவுசெய்யும் நடைமுறைக்கு நாங்கள் ஆதரவளிப்போம்.

# இந்த வழிகாட்டியின் பொருளடக்கம்

இந்த நேரத்தில் நான் எப்படி உணர்வேன்?

நான் ஒரு பங்காளி, பெற்றோர் அல்லது சினேகிதர்: நான் என்ன செய்யலாம்?

பாலியல் தாக்குதல் என்றால் என்ன?

பாலியல் செயற்பாட்டுக்கு ஒப்புதல் கொடுத்தல் என்றால் என்ன?

"வேண்டாம்" எனச் சொல்வது மட்டும்தான் நான் ஒப்புதல் கொடுக்கவில்லை என்பதைக் காட்டும் ஒரே ஒரு வழியா?

பாலியல் செயற்பாட்டுக்கு நான் முதலில் இணங்கிவிட்டு பின்னர் என்னுடைய மனதை மாற்றினால் என்ன நடக்கும்?

பாலியல் தாக்குதல் ஒன்றின் பின்னர் எனக்கு என்ன தெரிவுகள் உள்ளன?

பாலியல் தாக்குதல் ஒன்று நடந்து பல வருடங்களின் பின்னரும் அதை நான் அறிவிக்கலாமா?

பாலியல் வியாபாரத்தில் நான் வேலை செய்தால் என்ன நடக்கும்?

காவல்துறையினர் கண்டுபிடித்தால் நான் கைது செய்யப்படுவேனா?

காவல்துறையினருக்கு நான் அறிவித்தால், என்னுடைய குடிவரவு நிலை பாதிக்கப்படுமா?

என்னுடைய குடிவரவு நிலை பற்றிக் கேட்கப்படுவேனா?

எனக்கு வலுவிழப்பு ஏதாவது இருந்தால் என்ன நடக்கும்?

காவல்துறையினரை நான் எப்படி அழைப்பது?

காவல்துறையினரை நான் அழைத்தால், அதன்பின் என்ன நடக்கும்?

பாலியல் தாக்குதல் சாட்சியத் தொகுதி (SAEK)) என்றால் என்ன?

SAEK எங்கே தயாரிக்கப்படும்?

SAEK தொடர்பாக எனக்குத் தெரிவுகள் உள்ளனவா?

**அந்த** SAEK **ஐ காவல்துறையினருக்கு வழங்குவதற்கு நான் ஒப்புதல் கொடுத்த பின்னர் என்ன நடக்கும்**?

**வேறு எந்த வகையான ஆதாரங்கள் என்னுடைய வழக்குடன் தொடர்பானவையாக இருக்கக்கூடும்**?

**என்னுடைய வழக்கை யார் புலன்விசாரணை செய்வார்**?

**எனக்கு என்ன நடந்தது என்பது எல்லோருக்கும் தெரியவருமா**?

**கைது செய்யப்பட்ட பின்னர் என்ன நடக்கும்**?

**குற்றவாளி பிடிபடாவிட்டால் என்ன நடக்கும்**?

**காவல்துறையினர்**, **குற்றம்சாட்டப்பட்டவர்மீது எப்போதும் குற்றம்சுமத்துவார்களா**?

**நீதிமன்ற நடைமுறைகள் எவ்வளவு காலம் எடுக்கும்**?

**நீதிமன்றத்தில் என்ன நடக்கும்**?

**ஆரம்பக் கேட்புரை என்றால் என்ன**?

**நீதிமன்ற விசாரணை என்றால் என்ன**?

**நீதிமன்றத்தில் நான் சாட்சியமளிக்க வேண்டியிருக்குமா**?

**ஆங்கிலத்தில் என்னால் சௌகரியமாகத் தொடர்பாட முடியாது என்றால் என்ன நடக்கும்**?

**பாதிக்கப்பட்டவரின் பாதிப்பு வாக்குமூலம் என்றால் என்ன**?

**எந்த விதமான தீர்ப்புகளை ஒரு நீதிபதி உத்தரவிட முடியும்**?

**நன்நடத்தைப் பிணையில் விடுதலை** (Parole) **என்றால் என்ன**?

**குற்றவாளி சிறையிலிருந்து எப்போது விடுவிக்கப்படுவார்**?

***பாதிக்கப்பட்ட கனேடியரின் உரிமைகள் மசோதா*** (CVBR) **என்றால் என்ன**?

**நிதி இழப்பீட்டுகான ஈடு எதற்காவது எனக்குத் தகுதியுள்ளதா**?

**ரொறன்ரோவில் உதவி மற்றும் ஆற்றுப்படுத்துகையை எங்கே நான் பெற முடியும்**?

## இந்த நேரத்தில் நான் எப்படி உணர்வேன்?

"சரியானது" என ஒரு உணர்வு கிடையாது. பாலியல் தாக்குதல் பேரதிர்ச்சியை ஏற்படுத்தலாம், அத்துடன் அந்தச் சம்பவத்தின் போதும், அதன் பின்னரும் வெவ்வேறு உணர்வுகள், எண்ணங்கள், புலனுணர்வுகள் மற்றும் உணர்ச்சிகளை அது விளைவாக்கலாம். மிகவும் மனத்தகைப்பான சூழல்களுக்கான எதிர்வினைகள் ஆளுக்கு ஆள் வேறுபடும், அத்துடன் அனைவரும் ஒரே மாதிரியான எதிர்வினைகளை, ஒரே அளவிலான தீவிரத்தில், ஒரே அளவு காலத்துக்கு அனுபவிக்க மாட்டார்கள். இருந்தாலும், எதிர்வினை எதுவாக இருந்தாலும் அது பொதுவான மனிதப் பிரதிபலிப்பு என உணர்ந்துகொள்வது முக்கியமாகும். இந்தக் கஷ்டமான நேரத்தின்போது உங்களுக்கு உதவக்கூடிய முகவர் நிலையங்கள் மற்றும் அவற்றினது தொடர்புத் தகவல்கள் கொண்ட பட்டியல் ஒன்று இந்தக் கையேட்டின் பின்பக்கத்தில் உள்ளது.

## நான் ஒரு பங்காளி, பெற்றோர் அல்லது சினேகிதர்: நான் என்ன செய்யலாம்?

பாலியல் தாக்குதலுக்கு உட்பட்டவர்களுக்கு அவர்களுடைய குடும்பத்தவர்கள் மற்றும் சினேகிதர்களின் ஆதரவு தேவையாகும். பிழைத்து வாழ்பவர்கள், வெட்கத்தை, சங்கடத்தை, மனச்சோர்வை, பயத்தை உணரக்கூடும். என்ன நடந்தது என்பது பற்றிப் பேசுவதற்கு அவர்களுக்கு விருப்பமில்லாமல் இருக்கலாம். கதைப்பதற்கு அவர்கள் தயாராகவுள்ள போது செவிமடுப்பதற்கு நீங்கள் தயாராக இருங்கள். அவர்களில் உங்களுக்கு அக்கறையுள்ளது என்பதை

அவர்களுக்குத் தெரியப்படுத்துங்கள், அத்துடன் நடந்தவைகள் பற்றித் தீர்ப்புக் கூறாதீர்கள் அல்லது நடந்தவற்றுக்காக அவர்கள்மீது பழிசுமத்தாதீர்கள். இந்த நடைமுறையின் போது அவர்கள் எடுக்கும் முடிவுகளுக்கு ஆதரவாக இருங்கள். அவர்களுக்குக் குற்றவுணர்வு இருக்கலாம், ஆனால் நடந்ததுக்கு ஒருபோதும் அவர்கள் பொறுப்பாக இருக்க முடியாது. இந்தச் செய்தியை வழங்குவதன் மூலம் நீங்கள் அவர்களுக்கு பெரிய உதவியைச் செய்யக்கூடும்.

இந்தக் கஷ்டமான நேரத்தின்போது உங்களுடைய அன்புக்குரியவருக்கு உதவக்கூடிய முகவர் நிலையங்கள் மற்றும் அவற்றினது தொடர்புத் தகவல்கள் கொண்ட பட்டியல் ஒன்றினை இந்தக் கையேட்டின் பின்பக்கத்தில் நீங்கள் பார்க்கலாம்.

## பாலியல் தாக்குதல் என்றால் என்ன?

வேண்டப்படாத பாலியல் தொடர்புகள் யாவும் பாலியல் தாக்குதல் எனப்படும். பாலினம், வயது, கலாச்சாரப் பின்புலம் என்ற வேறுபாடின்றி எவருக்கும் பாலியல் தாக்குதல் நடக்கலாம். வேண்டப்படாத முத்தம், தொடுகை, உட்செலுத்தல் அல்லது உட்செலுத்தும் முயற்சியை இது உள்ளடக்கும், ஆனால் இவை மட்டும்தான் பாலியல் தாக்குதல் ஆகாது.

பாலியல் தாக்குதலை எவரும் செய்யலாம்: ஒரு அந்நியன், ஒரு நண்பர், ஒரு பங்காளி, ஒரு குடும்ப உறுப்பினர் அல்லது அதிகாரத்தில் உள்ள ஒரு நபர்.

## பாலியல் செயற்பாட்டுக்கு ஒப்புதல் (Consent) கொடுத்தல் என்றால் என்ன?

குறிப்பிட்டதொரு பாலியல் செயற்பாட்டில் ஈடுபடுவதற்காக, தன்னார்வத்துடனும் தன்னுணர்வுடனும் பங்குகொள்பவர்கள் சமமாக ஒப்புக்கொள்ளல், ஒப்புதல் எனப்படும். எதற்காக ஒப்புக்கொள்கின்றார் என்பதையும், அதன் சாத்தியமான நேர்மறை மற்றும் எதிர்மறையான விளைவுகளை அவர் புரிந்துகொள்கிறார் என்பதையும் ஒப்புதல் குறிக்கிறது.

பின்வரும் சந்தர்ப்பங்களில் ஒப்புதல் **<u>கொடுக்கப்படுவதில்லை</u>**:

- மதுபானம் அல்லது போதைப்பொருள் பாவனையால் நீங்கள் முடிவெடுக்க முடியாத நிலையில் உள்ளீர்கள்;
- ஒப்புதல் கொடுக்காமலிருப்பதன் பின்விளைவுகளுக்கு நீங்கள் பயப்படுகிறீர்கள்;
- நீங்கள் அச்சுறுத்தப்படுவதாக அல்லது மிரட்டப்படுவதாக உணர்கிறீர்கள்;
- நீங்கள் வற்புறுத்தப்படுகிறீர்கள் (மிரட்டல், அச்சுறுத்தல், அதிகாரத் துஷ்பிரயோகம், சாதுர்யமான கையாளுகை, தந்திரம் அல்லது செயல்கள் மற்றும் சொற்களால் கைவசப்படுத்தல் மூலம் கட்டாயப்படுத்தப்படுகிறீர்கள்);
- இணங்குவதற்கு நீங்கள் உடல்ரீதியாக நிர்ப்பந்திக்கப்படுகிறீர்கள்;
- "வேண்டாம்", என நீங்கள் சொற்களால் அல்லது உடலால் சொல்கிறீர்கள் (எ.கா. அழுதல், உதைத்தல், தள்ளிவிடுதல்); மற்றும்/அல்லது

- தகவலறியப்பட்ட தெரிவை எடுக்க முடியாமல் உங்களைத் தடுக்கும் வலுவிழப்பு அல்லது மன ஆரோக்கியப் பிரச்சினை உங்களுக்கு உள்ளது.

பாலியல் செயற்பாட்டில் பங்குகொள்பவரால் மட்டுமே ஒப்புதல் கொடுக்கப்படலாம்; உங்களின் சார்பாக, பெற்றோர், சகோதரன், சகோதரி, துணைவர், பங்காளி அல்லது சினேகிதர் போன்ற இன்னொருவரால் அது கொடுக்கப்பட முடியாது.

அழுத்தம், அச்சுறுத்தல், பின்விளைவுகளுக்கான பயம் அல்லது தந்திரம் காரணமாக ஏதாவதொரு பாலியல் நடவடிக்கையில் நீங்கள் பங்கெடுக்கும்போது, அந்த இணக்கத்தை ஒப்புதலெனக் குழப்பமடையக் கூடாது.

## “வேண்டாம்” எனச் சொல்வது மட்டும்தான் நான் ஒப்புதல் கொடுக்கவில்லை என்பதைக் காட்டும் ஒரே ஒரு வழியா?

இல்லை. நீங்கள் ஒப்புதல் கொடுக்கவில்லை என்பதை உங்களுடைய சொற்களால் அல்லது செயல்களால் நீங்கள் காட்டலாம். “போராடல், அலறியடித்துக்கொண்டு ஓடல் அல்லது விறைத்துப் போதல்” யாவுமே பேரதிர்ச்சிக்கான எதிர்வினைகள் ஆகும். போராடல், விலக முயற்சித்தல், அல்லது உங்களால் நகர முடியாமல் இருத்தல் போன்ற செயல்களும் நீங்கள் ஒப்புதல் கொடுக்கவில்லை என்பதைக் காட்டலாம்.

## பாலியல் செயற்பாட்டுக்கு நான் முதலில் இணங்கிவிட்டு பின்னர் என்னுடைய மனதை மாற்றினால் என்ன நடக்கும்?

பாலியல் செயற்பாட்டுக்கு நீங்கள் ஒத்துக்கொள்ளவில்லை என்றதும், அங்கு ஒப்புதல் இல்லை என்றாகி விடுகின்றது. ஒரு வகைப் பாலியல் செயற்பாட்டுக்கு ஒப்புதல் கொடுப்பது, இன்னொரு வகைப் பாலியல் செயற்பாட்டுக்கும் நீங்கள் ஒப்புதல் கொடுக்கிறீர்கள் எனப் பொருள்பட மாட்டாது.

கடந்த காலத்தில் ஒரு தனிநபருடன் ஒப்புதலுள்ள செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தவர் கூட பாலியல் தாக்குதலுக்கு உட்படலாம் – கடந்த காலத்தில் தனிநபர் ஒருவருடன் ஒப்புதலுள்ள பாலியல் செயற்பாடு செய்திருந்தால், அது எதிர்காலப் பாலியல் தொடர்புகளுக்குமான ஒப்புதல் என ஒருவரும் அனுமானிக்கக் கூடாது – ஒவ்வொரு தடவையும் ஒப்புதல் தேவை.

## பாலியல் தாக்குதல் ஒன்றின் பின்னர் எனக்கு என்ன தெரிவுகள் உள்ளன?

பாலியல் தாக்குதலிலிருந்து பிழைத்து வாழும் ஒருவராக, இந்த நடைமுறை பற்றியும், உங்களுக்குச் சிறந்த தெரிவு எது என்பது பற்றியும் நீங்கள் எடுக்கும் தெரிவுகளுக்கு நாங்கள் ஆதரவளிப்போம்.

பாலியல் தாக்குதலிலிருந்து பிழைத்து வாழும் ஒருவருக்குப் பின்வரும் தெரிவுகள் உள்ளன:

- காவல்துறையினருக்கு நீங்கள் அந்தப் பாலியல் தாக்குதலை அறிவிக்கலாம்;

- சமூகத்திலுள்ள ஆதரவான முகவர் நிலையங்களில் மருத்துவரீதியான மற்றும்/அல்லது உணர்ச்சிரீதியான ஆதரவை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்;
- உங்களைப் பாலியல்ரீதியில் தாக்கிய நபருக்கு எதிராக உரிமை நடவடிக்கை (எ.கா. வழக்குத் தொடரல்) எடுக்கலாம்.

## பாலியல் தாக்குதல் ஒன்று நடந்து பல வருடங்களின் பின்னரும் அதை நான் அறிவிக்கலாமா?

கனடாவில், வரம்புக்குட்பட்ட எந்த சட்டமும் பாலியல் குற்றங்களுக்கு கிடையாது. அதன் கருத்து என்னவென்றால், அது எவ்வளவு காலத்திற்கு முன்பு நடந்திருந்தாலும் காவல்துறையினருக்கு அதை நீங்கள் அறிவிக்கலாம், அத்துடன் அந்தப் பாலியல் தாக்குதலுக்காக ஒருவர் குற்றம்சாட்டப்படலாம்.

## பாலியல் வியாபாரத்தில் நான் வேலை செய்தால் என்ன நடக்கும்? காவல்துறையினர் கண்டுபிடித்தால் நான் கைது செய்யப்படுவேனா?

எவரும், எந்த நேரத்திலும், எங்கேயும், எவராலும் பாலிய**ல்** தாக்**குதலுக்கு உட்படுத்தப்ப**டலாம். பாலியல் வியாபாரத் தொழிலாளி ஒருவர், சேவைபெறுநர் ஒருவரால் பாலியல்ரீதியாகத் தாக்கப்படலாம் என்பது இதன் கருத்தாகும். ஒப்புதல் கொடுக்கப்படாத பாலியல் தொடர்புகள் யாவுமே, பாலியல் தாக்குதல்கள் ஆகும். பாலியல் வியாபாரத்தில்,

உங்களுடைய வேலையின் போது, நீங்கள் பாதிக்கப்பட்டிருந்தால் நீங்கள் கைது செய்யப்பட மாட்டீர்கள்.

## காவல்துறையினருக்கு நான் அறிவித்தால், என்னுடைய குடிவரவு நிலை பாதிக்கப்படுமா?

இல்லை. காவல்துறையினருக்கு அறிவிப்பது, உங்களுடைய குடிவரவு நிலையைப் பாதிக்கமாட்டாது.

## என்னுடைய குடிவரவு நிலை பற்றிக் கேட்கப்படுவேனா?

குறித்த சந்தர்ப்பங்களின் போது, உங்களுடைய குடிவரவு நிலை பற்றிக் உங்களைக் கேட்க வேண்டிய சட்டரீதியான தேவை அதிகாரி ஒருவருக்கு இருக்கக்கூடும்.

இந்தச் சந்தர்ப்பங்கள் ஆவன:

- மாகாணரீதியான சாட்சிப் பாதுகாப்புத் திட்டத்துக்கான (Provincial Witness Protection Program) அனுமதி தேவைப்படக்கூடிய அல்லது அதைத் தேடுகின்ற பாதிக்கப்பட்ட ஒருவர் அல்லது ஒரு சாட்சி;
- நீதிமன்றத் தேவைகளுக்காக அரசாங்கச் சட்டத்தரணி ஒருவர் அந்தத் தகவல்களைக் கோருகின்றார்;
- குற்றச்செயலின் அத்தியாவசியமான கூறுகளை நிரூபிப்பதற்கு அந்தத் தகவல்கள் அவசியமாக உள்ளன; மற்றும்/அல்லது
- பொதுமக்களின் அல்லது அதிகாரியின் பாதுகாப்புக்கும் பத்திரத்துக்கும், பாதிக்கப்பட்ட ஒருவரின் அல்லது சாட்சி ஒருவரின் குடியுரிமை நிலையைத் தீர்மானிப்பது

அவசியம் என்பதைத் தெளிவாகக் காட்டும் புலன்விசாரணைச் சூழல்கள்.

## எனக்கு வலுவிழப்பு ஏதாவது என்ன நடக்கும்? காவல்துறையினரை நான் எப்படி அழைப்பது?

வலுவிழப்புகள் உள்ளவர்கள் பல வழிகளில் அணுகக் கூடியவையாக ரொறன்ரோ காவல்துறையினரின் சேவைகள் உள்ளன. சேவை வலைத்தளம் மாகாணத்தி**ல்** *வலுவிழப்புகள் உள்ள ஒன்ராறியோ மக்களுக்கான அணுகல் சட்டத்துக்கு (Accessibility for Ontarians with Disabilities Act)* இணக்கமாக உள்ளது. ரொறன்ரோ காவல்துறைச் சேவையை ஒருவர் அழைக்கும்போது, மொழிபெயர்ப்புச் சேவைகள் கிடைக்கின்றன, அத்துடன் கேட்டல் திறனை இழந்தவர்களுக்கான TTY அமைப்பும் உள்ளது.

## காவல்துறையினரை நான் அழைத்தால், அதன்பின் என்ன நடக்கும்?

பாலியல் தாக்குதல் அப்போதுதான் நடந்திருந்தால், அல்லது உடனடி ஆபத்தில் நீங்கள் இருந்தால் 911ஐ அழையுங்கள்.

ஏற்கனவே நடந்திருந்தால், ரொறன்ரோ காவல்துறையினரின் பிரதான தொலைபேசி இலக்கத்தை, 416-808-2222ல் அழையுங்கள். சீருடை அணிந்த அதிகாரி ஒருவர் உங்களுடைய இடத்திற்கு வருவார்.

பாலியல் தாக்குதல் தொடர்பாக அனுப்பிவைக்கப்பட்ட அந்தச் சீருடை அணிந்த அதிகாரி பின்வருவனவற்றைச் செய்வார்:

- பிழைத்து வாழ்பவரின் இடத்துக்கு வந்ததும், அந்தப் பிழைத்து வாழ்பவரின் உடல்ரீதியான மற்றும் உணர்ச்சிரீதியான தேவைகள் பூர்த்திசெய்யப்படுவதை உறுதிப்படுத்துவதுடன், தேவைப்பட்டால் அவசரகால வண்டியை (ambulance) அழைப்பார்;
- சம்பவத்தைப் பற்றிய அடிப்படை விவரங்களை அறிவதற்காக ஆரம்பப் புலன்விசாரணை ஒன்றை பிழைத்து வாழ்பவரின் உதவியுடன் நடத்துவார். சாத்தியமானால் இது ஒரு தனிப்பட்ட சூழலில் நடக்கும்;
- பிழைத்து வாழ்பவருக்கு விசேட தேவைகள் இருந்தால், (எ.கா., மொழிபெயர்ப்பு, சைகை மொழி, உடல்ரீதியான மற்றும் ஏனைய வலுவிழப்புகள்) உதவிக்காக பொருத்தமான தனிநபர்களை அல்லது முகவர் நிலையங்களைத் தொடர்புகொள்வார்;
- பாலியல் தாக்குதலின் தன்மையைப் பொறுத்து, காயங்களுக்குச் சிகிச்சை பெற்றுக்கொள்வதற்காகவும், பாலியல் தாக்குதல் சாட்சியத் தொகுதி (Sexual Assault Evidence Kit (SAEK)) ஒன்றைத் தயாரிப்பதற்காகவும் வைத்தியசாலைக்குச் செல்லும்படி பிழைத்து வாழ்பவரை அந்த அதிகாரி கேட்கக்கூடும். இந்தத் தொகுதி தடயவியல் ஆதாரங்களைச் சேகரிக்கும்; மற்றும்/அல்லது;
- உடனடி நெருக்கீடு, பேரதிர்ச்சி மற்றும் ஆதரவுச் சேவைகள் பிழைத்து வாழ்பவருக்கு கிடைப்பதற்கு உதவுவதற்காக, அவரைத் தொடர்புகொள்ளும்படி

றொறன்ரோ பாதிக்கப்பட்டவர் சேவைகளைக் (Victim Services Toronto) கேட்கும் தெரிவு பிழைத்து வாழ்பவர்பவருக்கு இருப்பதைத் தெரிவிப்பார்.

## பாலியல் தாக்குதல் சாட்சியத் தொகுதி (SAEK) என்றால் என்ன?

பாலியல் தாக்குதல் சாட்சியத் தொகுதி (SAEK) என்பது, ஆதாரங்களைச் சேகரிக்கப் பயன்படும் உறைகள், போத்தல்கள் மற்றும் ஏனைய கொள்கலன்களைக் கொண்ட பாதுகாப்பாக மூடப்பட்ட ஒரு விசேடமான பெட்டியாகும். வெவ்வேறு நேரங்களில் ஆதாரங்கள் சேகரிக்கப்படலாம், ஆயினும் விரைவில் செய்வதே சிறந்தது. தாக்குதல் நடந்த 72 மணி நேரத்திற்குள் உடல்ரீதியான ஆதாரங்களைச் சேகரிப்பதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன; இருப்பினும் ஆதாரங்கள் 12 நாட்கள் வரைக்கும் கிடைக்கக்கூடும்.

## SAEK எங்கே தயாரிக்கப்படும்?

வைத்தியசாலையிலுள்ள பாலியல் தாக்குதல்/வீட்டு வன்முறை பராமரிப்பு மையம் (Sexual Assault/Domestic Violence Care Centre (SA/DVCC)) ஒன்றில் SAEK தயாரிக்கப்படும்.

றொறன்ரோவில் உள்ள பாலியல் தாக்குதல்/வீட்டு வன்முறை பராமரிப்பு மையங்கள் ஆவன:

Women's College Hospital

76 Grenville Street

Toronto, Ontario, M5S 1B2

416-323-6040

www.womenscollegehospital.ca/programs-and-services/sexual-assault-domestic-violence-care-centre/

Scarborough Hospital – Birchmount Campus

3030 Birchmount Road

Toronto, Ontario, M1W 3W3

416-495-2555

www.sacc.to

The Hospital for Sick Children (SickKids)
சந்தேகத்துக்குரிய பிள்ளை துன்புறுத்தல் மற்றும் புறக்கணிப்புத் திட்டம் (SCAN)

555 University Avenue

Room 6427 Black Wing

(416) 813-6275 (பகல் நேரம்)

(416) 813-7500 (24 மணி நேரம்)

www.sickkids.ca/scan

அண்மைய பாலியல் தாக்குதல் மற்றும் மிக நெருங்கிய பங்காளி வன்முறையிலிருந்து பிழைத்து வாழும் பெண்களுக்கும் ஆண்களுக்குமான அவசரகால சேவை, பின்தொடரும் ஆரோக்கியப் பராமரிப்பு மற்றும் ஆற்றுப்படுத்துகையை SA/DVCC வழங்குகின்றது. தினமும் 24 மணி நேரம் கிடைக்கும் இந்தப் பராமரிப்பு பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது: நெருக்கீட்டில்

இடையீடு; உடல்ரீதியான பரிசோதனை; காயங்களை ஆவணப்படுத்தல் (புகைப்படங்கள் உட்பட); பாலியல்ரீதியாகக் கடத்தப்படும் தொற்றுதல்களுக்கும் கர்ப்பத்துக்குமான பரிசோதனை மற்றும் சிகிச்சை; காவல்துறையினருக்குக் கொடுப்பதற்கு (அல்லது வைத்தியசாலையில் வைத்திருக்கப்படும்) தடயவியல் ஆதாரச் சேகரிப்பு; பாதுகாப்புத் திட்டமிடல்; மற்றும் தொடரும் ஆதரவுகளுக்கான பரிந்துரைப்புகள். பின்தொடரும் ஆரோக்கியப் பராமரிப்பு மற்றும் ஆற்றுப்படுத்துகையும்கூட SA/DVCCல் கிடைக்கின்றது.

## SAEK **தொடர்பாக எனக்குத் தெரிவுகள் உள்ளனவா**?

SAEK செயல்முறை தன்னார்வத்துக்குரியது, அதாவது அதற்கு உங்களுடைய ஒப்புதல் தேவை. பாலியல் தாக்குதலில் இருந்து பிழைத்து வாழும் ஒருவராக, இந்த நடைமுறை தொடர்பாக உங்களுக்குச் சிறந்த தெரிவாக நீங்கள் தேர்ந்தெடுக்கும் தெரிவுகளுக்கு நாங்கள் ஆதரவளிப்போம்.

பாலியல் தாக்குதலில் இருந்து பிழைத்து வாழும் ஒருவருக்கு, SAEK தொடர்பாகப் பின்வரும் தெரிவுகள் உள்ளன.

- SAEK ஒன்றைத் தயாரிப்பதும், காவல்துறையினரைச் சம்பந்தப்படும்படி கேட்பதும் உங்களுடைய தெரிவாக இருக்கும்.
- SAEK ஒன்றைத் தயாரிப்பதும், காவல்துறையினரைச் சம்பந்தப்பட வேண்டாம் எனக் கேட்பதும் உங்களுடைய தெரிவாக இருக்கும்.

(உங்களுடைய மனசு மாறினால், காவல்துறையினரைச் சம்பந்தப்படுத்த நீங்கள் விரும்பக்கூடும் என்பதற்காக இந்தத் தொகுதியைப் பாலியல் தாக்குதல் பராமரிப்பு நிலையத்தில் (Sexual Assault Care Centre) 6 மாதங்கள் வரைக்கும் வைத்திருக்க முடியும்).

- SAEKக்கு மறுத்த பின்பும், காவல்துறையினரைச் சம்பந்தப்படும்படி கேட்பது உங்களுடைய தெரிவாக இருக்கும்.

## அந்த SAEK ஐ காவல்துறையினருக்கு வழங்குவதற்கு நான் ஒப்புதல் கொடுத்த பின்னர் என்ன நடக்கும்?

வைத்தியசாலையிலிருந்து காவல்துறையினரால் பெற்றுக்கொள்ளப்பட்ட SAEK, தடயவியல் அடையாள அதிகாரி (Forensic Identification Officer) ஒருவரிடம் உடனடியாக ஒப்படைக்கப்படும். சேகரிக்கப்பட்ட காட்சிப் பொருள்கள் அனைத்தும் சேர்க்கப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்துவதற்காக SAEK உள்ளடக்கங்களின் முழுமையான பட்டியல் ஒன்று தயாரிக்கப்படும். வழக்கின் விபரங்களை மீள்பரிசோதனை செய்யும்போது, ஆய்வுக்காக SAEK சமர்ப்பிக்கப்படுவதற்கான அனுமதியைப் பெறுவதற்காக தடவியல் விஞ்ஞான மையத்தை (Center of Forensic Sciences (CFS)) தடயவியல் அடையாள அதிகாரி தொடர்புகொள்வார். சேகரிக்கப்பட்ட பொருள்கள் யாவும் ஆய்வுக்காகச் சமர்ப்பிக்கப்படுவதில்லை. வழக்கின் விபரங்களின் அடிப்படையில், SAEKல் இருக்கும் வழக்குடன் தொடர்பான காட்சிப்பொருள்கள் மற்றும்/அல்லது உடுப்புகள் மட்டும் சமர்ப்பிக்கப்படும்.

## வேறு எந்த வகையான ஆதாரங்கள் என்னுடைய வழக்குடன் தொடர்பானவையாக இருக்கக்கூடும்?

புலன்விசாரனைகளுக்கு ஆதாரங்கள் மிகவும் முக்கியமானவை; அதனால், ஆதாரங்களை விரைவாகச் சேகரித்தல் கருத்தில் கொள்ளப்படவேண்டும். வெறுமன உயிரியல் மாதிரிகள் மட்டும் தான் ஆதாரங்கள் அல்ல, வீடியோ, வாக்குமூலங்கள், கைத்தொலைபேசி மற்றும் சமூக ஊடகங்களின் உள்ளடக்கங்கள் மற்றும் வேறு ஆவணங்களும் ஆதாரங்களில் உள்ளடங்கும். புலன்விசாரணை ஒன்றை நடத்துவதற்கு ஆதாரங்கள் கட்டாயமாகத் தேவை என்றில்லாவிட்டாலும்கூட, காவல்துறையினரின் புலன்விசாரணைக்கு அவை மிகவும் உதவியாகவிருக்கும்.

## என்னுடைய வழக்கை யார் புலன்விசாரணை செய்வார்?

பாலியல் தாக்குதல் வழக்குகள் யாவும், பாலியல் தாக்குதல் புலன்விசாரணைகளில் விசேட பயிற்சி பெற்ற காவல்துறை அதிகாரிகளால் புலன்விசாரணை செய்யப்படுகின்றன. பாலியல் தாக்குதல் புலன்விசாரணையாளர்கள் பெறுகின்ற பயிற்சி, பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் தேவைகளுக்கு மரியாதை அளிக்கும் அதேவேளையில், பாலியல் தாக்குதல் சம்பவங்கள் பற்றித் தொடர்ச்சியான மற்றும் முழுமையான புலன்விசாரணையைச் செய்வதில் கவனம் செலுத்துவதை மையப்படுத்தியதாக உள்ளது. பாலியல் தாக்குதல் புலன்விசாரணைகளை மேம்படுத்துவதற்காக, பாதிக்கப்பட்டவர்களை விளங்கிக்கொள்ளல் மற்றும் சிறந்த நடைமுறைகளை ஊக்கப்படுத்தலுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் இந்தப் பயிற்சி வடிவமைக்கப்பட்டுள்ளது.

பயிற்சி பெற்ற பாலியல் தாக்குதல் புலன்விசாரணையாளர் ஒருவர் உங்களுடைய வழக்குக்கு நியமிக்கப்படுவார். ரொறன்ரோவில் பாலியல் தாக்குதல் வழக்குகளுக்கான ஒதுக்கீடு, ஆபத்தின் அடிப்படையிலான மதிப்பீடுகளின்படி நடைபெறுகின்றது. இதன் கருத்து:

- குற்றம் சாட்டப்பட்டவர், "பாதிக்கப்பட்டவருக்குத் தெரிந்தவராக" இருக்கும் வழக்குகள், பாலியல் தாக்குதல் நடைபெற்ற இடத்தில் உள்ள பிரிவினரால் நடத்தப்படும், அத்துடன்;
- "சமூகத்துக்கு அதிக ஆபத்தானவை" என்று கருதப்படுவதுடன், குற்றம் சாட்டப்பட்டவர், "பாதிக்கப்பட்டவருக்குத் தெரியாதவராக" இருக்கும் வழக்குகள் பாலியல் குற்றப்பிரிவினரால் (Sex Crimes) புலன்விசாரணை செய்யப்படும்.

உங்களுடைய வழக்குக்கு நியமிக்கப்படும் பயிற்சி பெற்ற பாலியல் தாக்குதல் புலன்விசாரணையாளர் பின்வருவனவற்றைச் செய்வார்:

- சம்பவத்தை முழுமையாக விசாரணை செய்தல்;
- பாதிக்கப்பட்டவருக்கு மருத்துவக் கவனிப்புக்கான அணுகல் இருப்பதை உறுதிப்படுத்தல்;
- தேவைக்கேற்ப, SAEK உள்ளடங்கலான அனைத்து ஆதாரங்களும் சேகரிக்கப்படும் நடைமுறையை விளங்கப்படுத்தல்;
- ரொறன்ரோ பாதிக்கப்பட்டவருக்கான சேவைகளுடன் கலந்தாலோசித்தல்;

- விபரமான நேர் காணல் நடக்க வேண்டிய இடம் மற்றும் நேரம் பற்றி மதிப்பிடல் மற்றும் அது பற்றிப் பிழைத்து வாழ்பவருடன் கலந்துரையாடல்;
- நேர் காணல் ஓர் ஆணால் செய்யப்படுவதையா அல்லது பெண்ணால் செய்யப்படுவதையா பிழைத்து வாழ்பவர் விரும்புகிறார் எனக் கேட்டல், அத்துடன் பிழைத்து வாழ்பவரின் தெரிவுக்கு மதிப்பளிப்பதற்காக முடியுமானளவு முயற்சிகளை மேற்கொள்ளல்;
- புலன்விசாரணை பற்றிய தகவல்களை உரிய நேரத்தில் பிழைத்து வாழ்பவருக்குத் தெரிவித்தல்;
- பொருத்தமானபோது குற்றம்சுமத்துதல்;
- பாதிப்புகள் பற்றிய வாக்குமூலத்தைப் ( Victim Impact Statement) பூர்த்திசெய்யும் உரிமை பிழைத்து வாழ்பவருக்கு இருக்கிறது என்பதை அவருக்கு அறிவித்தல்;
- பொருத்தமான படிவங்களை நிரப்புதல், நீதிமன்றத்துக்குத் தயாராதல் போன்றவற்றுக்கு உதவிசெய்யவும், குற்றம்சாட்டப்பட்டவருக்கான நீதிமன்ற நடைமுறைகள் பற்றித் தொடர்ந்து தகவல் வழங்கவும் பாதிக்கப்பட்டவர் சாட்சிகள் உதவித் திட்டத்திலிருந்து ஒருவர் பிழைத்து வாழ்பவரைத் தொடர்புகொள்ளவார் என்பதை அவருக்கு அறிவித்தல்

## எனக்கு என்ன நடந்தது என்பது எல்லோருக்கும் தெரியவருமா?

உங்களுடைய அந்தரங்கம் எங்களுக்கு மிகவும் முக்கியமாகும். ஒரு பாலியல் தாக்குதல் பற்றிக் காவல்துறையினருக்கு அறிவிக்கப்படும்போது, செய்தியாக வெளியிடப்பட வேண்டுமா எனத் தீர்மானிப்பதற்கு அனைத்துத் தகவல்களும்

பரிசீலிக்கப்படும். பொதுவாக, பின்வரும் நிலைமைகள் இருப்பின், அவை செய்தியாக வெளியிடப்படும்:

- பொதுமக்களின் பாதுகாப்புக்கு ஆபத்து;
- பொதுமக்களின் தகவல்கள் வழக்கைத் தீர்**ப்பதற்கு** உதவ**க்கூடு**ம்;
- பாதிக்கப்பட்டவர்கள் பலர் முன்வரக்கூடும் என்ற நம்பிக்கை; மற்றும்/அல்லது
- ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் மற்றும்/அல்லது புலன்விசாரணையில் ஒரு புதிய செய்தி கிடைத்துள்ளது.

தாக்குதல் திகதி, நேரம் மற்றும் தாக்குதல் நடைபெற்ற இடம் உட்பட பாலியல் தாக்குதல் தொடர்பான பொதுத் தகவல்கள் செய்தியில் வெளியிடப்படும். பிழைத்து வாழ்பவரின் பாலினமும் வயதும் அந்தச் செய்தியில் உள்ளடக்கப்படும். பொறுப்பானவர் எனக் குற்றம்சுமத்தப்படுபவர் இனம்காணப்படாவிட்டால், அவர் பற்றிய விபரமும், இனம்காணப்பட்டால் அவரின் பெயரும் வயதும் கூட அந்தச் செய்தியில் உள்ளடக்கப்படும்.

ஊடகங்களுக்கு உங்களுடைய பெயர் ஒருபோதும் வெளியிடப்பட மாட்டாது.

## கைது செய்யப்பட்ட பின்னர் என்ன நடக்கும்?

குற்றச்செயல் சார்பாக ஒருவர் கைது செய்யப்பட்டு, அவர்மீது குற்றம்சுமத்தப்பட்டதும், அவர் “குற்றம்சுமத்தப்பட்டவர்” எனப்படுவார். சூழ்நிலையைப் பொறுத்து, பிணை

விசாரணைவரை காவல்துறையினர் குற்றம்சுமத்தப்பட்டவரை வைத்திருக்கலாம், குற்றம்சுமத்தப்பட முடியாது என நிரூபிக்க வேண்டிய விசாரணைக்குப் பரிந்துரைக்கலாம் அல்லது நிபந்தனைகளுடன் விடுவிக்கலாம்.

அந்தக் குற்றம்சுமத்தப்பட்டவர் காவல்துறையினரால் விடுவிக்கப்படாவிட்டால், கைது செய்யப்பட்டு 24 மணி நேரத்துக்குள், பிணை விசாரணைக்காக, நீதிபதி அல்லது சமாதான நீதவான் (Justice of the Peace (JP)) ஒருவர் முன் கொண்டு செல்லப்படவேண்டும்.

பிணை விசாரணையின்போது, அந்தக் குற்றம்சுமத்தப்பட்டவரை பிணையில் விடுவதா அல்லது தொடர்ந்து சிறையில் வைத்திருப்பதா என JP அல்லது நீதிபதி தீர்மானிப்பார். குற்றம்சுமத்தப்பட்டவரைத் தெரிந்த ஒருவர், நீதிமன்றத் திகதிகளில் குற்றம்சுமத்தப்பட்டவர் நீதிமன்றத்துக்கு வருவார் என வாக்குறுதியாக பணம் அல்லது வேறுவகையான உத்தரவாதத்தை வழங்குதல் பிணை எனப்படும். JP அல்லது நீதிபதி விதிக்கும் நிபந்தனைகள் எனப்படும் சில விதிமுறைகளைப் பின்பற்றுவதற்கு குற்றம்சுமத்தப்பட்டவர் ஒத்துக்கொள்ள வேண்டிய தேவையுமிருக்கலாம்.

"தொடர்பு வைக்கக் கூடாது கட்டளை (No Contact Order)", பொதுவாக, நிபந்தனைகளில் ஒன்றாக இருக்கும்.

குற்றம்சுமத்தப்பட்டவர், உங்களுடன் எந்தவிதமான தொடர்பையும் வைத்திருக்க முடியாது என்பது இதன் கருத்தாகும் – மூன்றாம் தரப்பு நபருக்கு (இன்னொரு நபர்)

ஊடாகக் கூட தொடர்புகொள்ளக் கூடாது. குற்றம்சுமத்தப்பட்டவர் அல்லது குற்றம்சுமத்தப்பட்டவரின் வேண்டுகோளின்பேரில் யாராவது ஒருவர், உங்களைத் தொலைபேசி, கடிதம், மின்னஞ்சல், குறுஞ்செய்தி, சமூக ஊடகங்கள் மூலம் அல்லது நேரில் தொடர்புகொள்ள முடியாது. பொதுவாக குற்றம்சுமத்தப்பட்டவர், உங்களுடைய வீட்டுக்கு, பாடசாலைக்கு மற்றும்/அல்லது வேலையிடத்துக்கு அருகில் வருவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார். பிணை நிபந்தனைகளில் எதையாவது குற்றம்சுமத்தப்பட்டவர் பின்பற்றாவிட்டால், **காவல்துறையினரை நீங்கள் தொடர்புகொள்ளுங்கள்**. பிணை நிபந்தனைகளை மீறியதற்காக, மேலதிக குற்றச்சாட்டு ஒன்று குற்றம்சுமத்தப்பட்டவர் மேல் இடப்படலாம்.

நீதி விசாரணையின் போது, பல தடவைகள் நீதிமன்றத்துக்குக் குற்றம்சுமத்தப்பட்டவர் வருவார். இந்த நீதிமன்றத் திகதிகளில் சில "நிர்ணயிக்கப்பட்ட திகதி(கள்) (Set Date(s))" எனப்படும். இந்த நீதிமன்றத் திகதிகளில் நீங்கள் சமூகமளிக்கத் தேவையில்லை. இந்தத் திகதிகள், சட்டத்தரணிகளின் வழக்கமான தயாராதல் திகதிகளாகும்.

ஆரம்பக் கேட்புரை அல்லது நீதிமன்ற விசாரணை ஒன்று இருந்தால் மட்டுமே நீதிமன்றத்துக்கு நீங்கள் சமூகமளிக்க வேண்டும். ஆரம்பக் கேட்புரை மற்றும் நீதிமன்ற விசாரணைகள் பற்றி பின்னர் இந்த கையேட்டில் விளங்கப்படுத்தப்படும்.

## குற்றவாளி பிடிபடாவிட்டால் என்ன நடக்கும்?

தீர்க்கப்படாத பாலியல் தாக்குதல் வழக்குகள் ஒருபோதும் முடிவடைவதில்லை; அவை எப்போதும் செயலில் இருக்கும். கூடுதலான தகவல் ஒன்று பெறப்பட்டால் மேலதிக புலன்விசாரணை நடக்கும், அது கைது செய்யப்படல் ஒன்றுக்கு இட்டுச்செல்லலாம்.

## காவல்துறையினர், குற்றம்சாட்டப்பட்டவர்மீது எப்போதும் குற்றம்சுமத்துவார்களா?

புலன்விசாரணையை ஆதரிப்பதற்குப் போதுமான ஆதாரங்கள் இருந்தால், குற்றம்சுமத்துவது காவல்துறையினரின் பங்காக இருக்கும். சிலவேளைகளில் குற்றம்சுமத்துவதில்லை என காவல்துறையினர் முடிவெடுப்பார்கள். உங்களை அவர்கள் நம்பவில்லை அல்லது பாலியல் தாக்குதல் நடக்கவில்லை என்பதல்ல இதன் கருத்து. குற்றவியல் குற்றச்சாட்டு ஒன்றை நீதிமன்றத்தில் நிரூபிப்பதற்குப் போதுமான ஆதாரங்கள் இல்லையென்பது இதன் கருத்தாக இருக்கலாம். இப்படி நடந்தால், உங்களுடைய வழக்கில் ஏன் இது நடந்தது என்பதை அந்தப் புலன்விசாரணையாளர் உங்களுக்கு விளங்கப்படுத்தக் கூடும். உங்களுக்கு இருக்கும் உரிமைத் தெரிவுகள் பற்றி அந்தப் புலன்விசாரணையாளர் உங்களுக்கு கூறக்கூடும் (இதற்கான சில முகவர் நிலையங்களை இந்தக் கையேட்டின் பின்பக்கத்தில் பார்க்கலாம்).

## நீதிமன்ற நடைமுறைகள் எவ்வளவு காலம் எடுக்கும்?

வழக்கைப் பொறுத்து, நீதிமன்ற வழக்கொன்று முடிவடைவதற்குப் பல மாதங்கள் முதல் பல வருடங்கள் எடுக்கலாம். இந்த நீண்ட காத்திருப்பு உங்களுக்குக் கஷ்டமானதாக இருக்கலாம். இந்த நேரத்தில் ஆதரவு இருப்பது முக்கியமாகும். இந்த நடைமுறைக்கு ஊடாகச் செல்லும்போது உங்களுக்கு உதவி செய்யக்கூடிய சமூக முகவர் நிலையங்கள் உள்ளன. இந்த முகவர் நிலையங்களில் சிலவற்றை இந்தக் கையேட்டின் பின்பக்கத்தில் பார்க்கலாம்.

## நீதிமன்றத்தில் என்ன நடக்கும்?

இந்த நீதிமன்ற நடைமுறைக்கூடாக உங்களை வழிநடத்தும் நோக்கத்திற்காக, நீதிமன்றங்களில் அமைந்திருக்கும் பாதிக்கப்பட்டவர்/சாட்சி உதவித் திட்டத்திலுள்ள (Victim Witness Assistance Program (VWAP)), பணியாளர் ஒருவரிடம் உங்களுடைய வழக்குப் பரிந்துரைக்கப்படும். உங்களுடைய குற்றவியல் நீதிமன்ற வழக்கின் நிலையை உங்களுக்கு அறிவிப்பதும், குற்றவியல் நீதிமன்ற அமைப்பு, நீதிமன்ற நடைமுறைகள் மற்றும் நீதிமன்றத்தில் உங்களுடைய பங்கு பற்றிய உங்களுடைய கேள்விகளுக்குப் பதிலளிப்பதும் அந்தப் பணியாளரின் பங்காக இருக்கும். அந்த VWAP பணியாளர்கள் பின்வருவனவற்றைச் செய்வார்கள்:

- நீதிமன்றத் திகதிகள் ஒவ்வொன்றின் போதும் எதை எதிர்பார்க்கலாம் என நீங்கள் விளங்கிக்கொள்வதற்கு உதவுதல்;

- பிணை நிபந்தனைகள், நன்நடத்தைக் கட்டளைகள் (Probation Order) போன்ற நீதிமன்றப் பத்திரங்களின் பிரதிகளை உங்களுக்கு வழங்குதல்;
- நீதிமன்ற நடைமுறை முழுவதற்கும் தொடர்ந்து உணர்வுபூர்வமான ஆதரவை வழங்குதல்;
- பாதிக்கப்பட்டவரின் பாதிப்புப் பற்றிய வாக்குமூலம் ஒன்றைப் பூர்த்திசெய்ய உதவுதல்; மற்றும்
- நீங்கள் சாட்சியம் சொல்ல வேண்டிய தேவையிருந்தால், அரசாங்கச் சட்டத்தரணியை (Crown Attorney) நீங்கள் சந்திப்பதற்காக, அரசாங்கச் சட்டத்தரணியின் அலுவலகத்துடன் ஒருங்கிணைத்தல்

ஆரம்பக் கேட்புரை அல்லது நீதிமன்ற விசாரணை ஒன்றுக்கான திகதி ஒன்று தெரிவுசெய்யப்பட்டவுடன், முடியுமான விரைவில் ஒரு அரசாங்கச் சட்டத்தரணி நியமிக்கப்படுவார். உங்களைச் சந்திப்பதும், நீதிமன்ற விசாரணைக்காக உங்களைத் தயார்செய்ய வேண்டியதும் அந்த அரசாங்கச் சட்டத்தரணியின் கடமையாகும். பொதுவாக, புலன்விசாரணை செய்யும் அதிகாரி மற்றும் VWAP பிரதிநிதிகளுடன் இந்தத் தயார்படுத்தல் நடக்கும்.

நீதிமன்றத்துக்குத் தயாராவதற்காக உங்களுக்கு உதவிசெய்யக்கூடிய பல ஆதாரவளங்கள் உள்ளன. இந்த ஆதாரவளங்களை அந்தப் புலன்விசாரணை அதிகாரி உங்களுக்கு வழங்குவார். இயங்குகின்ற (animated) நீதிமன்றம் ஒன்றை உள்ளடக்குவதுடன் கனடா நீதிமன்ற நடைமுறை பற்றிய தகவல்களை www.courtprep.ca என்ற வலைத்தளம் வழங்குகிறது.

## ஆரம்பக் கேட்புரை (preliminary hearing) என்றால் என்ன?

ஆரம்பக் கேட்புரை என்பது, நீதிபதி ஒருவர் முன்பான "சிறியதொரு நீதிமன்ற விசாரணை" ஆகும். வழக்குகள் யாவற்றுக்கும் இது தேவைப்படாது, ஆனால் பாலியல் தாக்குதல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படும்போது இது மிகவும் பொதுவானது. ஆரம்பக் கேட்புரை ஒன்றின்போது, நீதிமன்ற விசாரணையைத் தொடர்வதற்குப் போதுமான ஆதாரங்கள் அரசாங்கச் சட்டத்தரணியிடம் உள்ளதா என்பதை நீதிபதி தீர்மானிப்பார். ஆரம்பக் கேட்புரையின்போது அனேகமாக நீங்கள் சாட்சியமளிக்க வேண்டியிருக்கும். ஏனைய சாட்சிகளும் சாட்சியமளிக்க வேண்டியிருக்கலாம். குற்றம்சுமத்தப்பட்டவரும் அவரின் சட்டத்தரணியும் சமூகமளிப்பதுடன் சாட்சியமளிப்பார்கள்.

## நீதிமன்ற விசாரணை (trial) என்றால் என்ன?

நீதிமன்ற விசாரணையின் போது, அரசாங்கச் சட்டத்தரணியும் குற்றம்சுமத்தப்பட்டவரின் சட்டத்தரணியும், பாலியல் தாக்குதலின் முன்னர், தாக்குதலின் போது, தாக்குதலின் பின்னர் என்ன நடந்தது என உங்களையும் ஏனைய சாட்சிகளையும் கேள்விகள் கேட்பார்கள். நீதிமன்ற விசாரணையின் முடிவில் தீர்ப்பு எனப்படும் விசாரணை முடிவை நீதிபதி அறிவிப்பார். நீதிபதி அல்லது நடுவர் குழு ஆதாரங்களைப் பரிசீலித்து, தீர்ப்பினை முடிவு செய்வதற்குப் பல வாரங்கள் எடுக்கலாம்.

நீதிமன்ற விசாரணையின் ஆரம்பத்தில், குற்றம்சுமத்தப்படடவர் பாலியல் தாக்குதல்

குற்றச்சாட்டு/குற்றச்சாட்டுகளுக்கான "குற்றவாளி" என ஒப்புக்கொள்வார் அல்லது "குற்றவாளி அல்ல" என்ன வாதிடுவார். குற்றம் செய்ததை, குற்றம்சுமத்தப்பட்டவர் ஒப்புக்கொள்கிறார், என்பது "குற்றவாளி" என ஒப்புக்கொள்ளலின் கருத்தாகும். இப்படியான வழக்குகளில் நீதிமன்ற விசாரணை இருக்காது, நீங்கள் சாட்சியமளிக்கத் தேவையில்லை. வழக்கின் தரவுகளை அந்த நீதிபதி கேட்பார், குற்றம்சுமத்தப்பட்டவர் குற்றவாளியா என்பதைக் கண்டறிவார், அத்துடன் கொடுக்கப்பட வேண்டிய தண்டனையைத் தீர்மானிப்பார். குற்றம்சுமத்தப்பட்டவர் குற்றவாளி எனக் காணப்பட்டால், பரந்துபட்டளவிலான தண்டனைகளிலிருந்து ஒரு தண்டனையை நீதிபதி தெரிவுசெய்வார்.

குற்றம்சுமத்தப்பட்டவர் குற்றம் செய்ததை ஒப்புக்கொள்ளவில்லை என்பது "குற்றவாளி அல்ல" என்ற வாதிடலின் கருத்தாகும். பின்னர், குற்றம்சுமத்தப்பட்டவர் நீதிபதியின் முன்பான அல்லது நீதிபதி மற்றும் நடுவர் குழுவின் முன்பான நீதிமன்ற விசாரணை ஒன்றைக் கோருவார். இப்படியான வழக்குகளில், நீதிமன்ற விசாரணைக்குச் சாட்சியமளிப்பதற்காக நீங்கள் நீதிமன்றத்துக்குச் சமூகமளிக்க வேண்டும்.

குற்றம்சுமத்தப்பட்டவர், குற்றமற்றவர் என நீதிபதியோ அல்லது நடுவர் குழுவோ தீர்மானித்தால், உங்களையோ அல்லது ஏனைய சாட்சிகளையோ அவர்கள் நம்பவில்லை என்பது இதன் கருத்தாகாது என்பதை நினைவில் வைத்திருத்தல் முக்கியமாகும். குற்றம்சுமத்தப்பட்டவர், குற்றமற்றவர் எனக் காணப்பட்டால், குற்றம்சுமத்தப்பட்டவர்

விடுதலை செய்யப்படுவார். இது குற்றத்திலிருந்து விடுதலை எனப்படும்.

## நீதிமன்றத்தில் நான் சாட்சியமளிக்க வேண்டியிருக்குமா?

குற்றம்சுமத்தப்பட்டவர், குற்றவாளி அல்ல என வாதிடுவதைத் தெரிவுசெய்தால், ஆரம்பக் கேட்புரையின்போதும் நீதிமன்ற விசாரணையின்போதும் அனேகமாக நீங்கள் சாட்சியமளிக்க வேண்டியிருக்கும். நீதிமன்றத்துக்குத் தயாராவதற்காக உங்களுக்கு உதவிசெய்யக்கூடிய பல ஆதாரவளங்கள் உள்ளன. இந்த ஆதாரவளங்களை அந்தப் புலன்விசாரணை அதிகாரி உங்களுக்கு வழங்குவார். இயங்குகின்ற (animated) நீதிமன்றம் ஒன்றை உள்ளடக்குவதுடன் கனடா நீதிமன்ற நடைமுறை பற்றிய தகவல்களை www.courtprep.ca என்ற வலைத்தளம் வழங்குகிறது. இந்த வலைத்தளம் இளைஞர்களாலும் ஸ்காபோரோ வைத்தியசாலையின் பாலியல் தாக்குதல் பராமரிப்பு நிலையத்தினராலும் உருவாக்கப்பட்டுள்ளது.

## ஆங்கிலத்தில் என்னால் சௌகரியமாகத் தொடர்பாட முடியாது என்றால் என்ன நடக்கும்?

உங்களுக்கு மிகவும் சௌகரியமான மொழியில் தொடர்பாடுவதற்கு நீங்கள் அனுமதிக்கப்படுவீர்கள். காவல்துறையினருடன் தொடர்பாடுவதற்கு அல்லது நீதிமன்றத்தில் சாட்சியமளிப்பதற்கு உதவியாக சைகை மொழிபெயர்ப்பாளர் உட்பட ஒரு மொழிபெயர்ப்பாளர் உங்களுக்குத் தேவையானால், அப்படி ஒரு மொழிபெயர்ப்பாளர் உங்களுக்கு வழங்கப்படுவார்.

## பாதிக்கப்பட்டவரின் பாதிப்பு வாக்குமூலம் என்றால் என்ன?

குற்றம்சுமத்தப்பட்டவர் குற்றவாளி என ஒப்புக்கொள்ளல் உட்பட குற்றம்சுமத்தப்பட்டவர் குற்றவாளி என நீதிமன்றத்தில் கண்டறியப்பட்டால், பாதிக்கப்பட்டவரின் பாதிப்பு வாக்குமூலத்தைப் பூர்த்திசெய்யும்படி அரசாங்கச் சட்டத்தரணி உங்களிடம் கேட்பார். அந்தப் பாலியல் தாக்குதல் உணர்ச்சிரீதியாகவும் உடல்ரீதியாகவும் உங்களுடைய வாழ்க்கையை எவ்வகையில் பாதித்தது என்பதைச் சொல்வதற்கான சந்தர்ப்பமாக இந்தப் பத்திரம் இருக்கிறது. தண்டனை வழங்கும்போது, இந்த வாக்குமூலத்தை நீதிபதி கருத்தில் கொள்வார். VWAP பணியாளர் ஒருவர் பாதிக்கப்பட்டவரின் பாதிப்பு வாக்குமூலத்தைப் பூர்த்திசெய்வதற்கு உங்களுக்கு உதவி செய்யமுடியும்.

பாதிக்கப்பட்டவரின் பாதிப்பு வாக்குமூலம் ஒன்றைப் பூர்த்திசெய்வது உங்களுடைய தெரிவாக இருக்கும். குற்றம்சுமத்தப்பட்டவருக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதற்காக நீங்கள் இதைச் செய்ய வேண்டியதில்லை. உங்களுடைய வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் நீங்கள் வாசிக்க விரும்பினால், அதுவும் உங்களுடைய விருப்பத்துக்குரியதாகவே இருக்கும். இந்தப் பாலியல் தாக்குதல் உங்களிலும் உங்களுடைய வாழ்க்கையிலும் ஏற்படுத்திய பாதிப்பை அந்த நீதிபதி விளங்கிக்கொள்வது மிகவும் முக்கியமாகும். இந்த வாக்குமூலத்தை நீங்கள் பூர்த்திசெய்தால், விதிக்கப்பட வேண்டிய தண்டனையைத் தீர்மானிக்கும்போது, நீங்கள் கூறியதை நீதிபதி கருத்தில் கொள்ள வேண்டும்.

## எந்த விதமான தீர்ப்புகளை ஒரு நீதிபதி உத்தரவிட முடியும்?

*நன்நடத்தை:*

குற்றவாளிகள் தமது தண்டனைக் காலத்தின்போது சமூகத்தில் சேவையாற்றுதல் நன்நடத்தை எனப்படும். குற்றவாளிகள் மேற்பார்வை செய்யப்படுவார்கள், அத்துடன் ஒரு நன்நடத்தை அதிகாரியை அவர்கள் சந்திக்க வேண்டும். பொதுவாக, நன்நடத்தைக் கட்டளையில் பட்டியலிடப்பட்டிருக்கும் விதிமுறைகளை குற்றவாளிகள் பின்பற்ற வேண்டியிருக்கும். இந்த விதிமுறைகள் நிபந்தனைகள் எனப்படும், அவை பின்வருவனவற்றை உள்ளடக்கலாம்: மதுபானம் பாவிக்காமலிருத்தல்; குறித்த பகுதிகள் அல்லது நபர்களிடமிருந்து விலகியிருத்தல்; ஆற்றுப்படுத்துகைக்குச் சமூகமளித்தல், தொழில் தேடுதல் அல்லது அந்தத் தொழிலைப் பேணல்; குறித்த நேரத்துக்கு (curfew) வீட்டுக்கு வரல். ஒரு நன்நடத்தைக் கட்டளை, மூன்று வருடங்களுக்கு மேல் நீடிக்க மாட்டாது.

நன்நடத்தைக் கட்டளையின் ஏதாவது ஒரு நிபந்தனையைக் குற்றவாளி மீறினால், அவர் கைது செய்யப்படக்கூடும் அத்துடன் "நன்நடத்தை மீறலுக்காக" அவரில் புதியதொரு குற்றம்சாட்டப்படக்கூடும்.

*நன்நடத்தையுடனான இடையீடு செய்யப்பட்ட தண்டனை:*

குற்றவாளிக்கு வழங்கும் தண்டனையைத் தாமதிப்பதை அல்லது அதை "இடையீடு" செய்வதை நீதிபதி ஒருவர் தெரிவுசெய்யக்கூடும். குற்றவாளியை நன்நடத்தைக்

கட்டளையில் விடுதலை செய்யக்கூடும், என்பது இதன் கருத்தாகும். குற்றவாளி சிறையில் இருக்க வேண்டியதில்லை, ஆனால் நன்நடத்தை அதிகாரி ஒருவரின் மேற்பார்வையின் கீழ் இருப்பார்.

*தொடர்ச்சியற்ற தண்டனை (Intermittent Sentence):*

நீதிபதி ஒருவர், 90 நாள் அல்லது அதைவிடக் குறைந்த நாள் தண்டனையை வழங்கும்போது, குற்றவாளி வார இறுதி நாட்களில் மட்டும் சிறைக்குச் செல்லக்கூடும். இது குற்றவாளி வேலைக்கு அல்லது பாடசாலைக்குப் போவதற்கு அல்லது ஏதாவது ஆரோக்கியப் பிரச்சினையைக் கையாளுவதற்கு அவரை அனுமதிக்கும். இந்தத் தண்டனையுடன் எப்போதும் நன்நடத்தைக் கட்டளை இருக்கும். குற்றவாளி சிறையில் இல்லாத போது, நன்நடத்தைக் கட்டளையுடன் இணங்கி நடக்கவேண்டும்.

*சிறைவைத்தல்:*

குற்றவாளியைச் சிறைக்கு அனுப்புதல் சிறைவைத்தல் எனப்படும். தண்டனையின் ஒரு பகுதியாக, "தொடர்புகொள்ளக் கூடாது கட்டளை" என்ற கட்டளையையும் அந்த நீதிபதி பிறப்பிக்கலாம். குற்றவாளி சிறையிலிருந்து உங்களைத் தொடர்புகொள்ள முடியாது என்பது இதன் கருத்தாகும்.

தண்டனை இரண்டு வருடங்களுக்கும் குறைவாக இருந்தால், குற்றவாளி "மாகாணச் சிறை" ஒன்றுக்கு அனுப்பப்படுவார். சிறையிலிருந்து வெளியேறும்போது, கடைப்பிடிக்க வேண்டிய

நன்நடத்தைக் கட்டளை ஒன்றும் குற்றவாளி ஒருவருக்குக் கொடுக்கப்படலாம்.
தண்டனை இரண்டு வருடங்கள் அல்லது அதற்கும் அதிகமானால், குற்றவாளி "மத்திய சிறைச்சாலைக்கு" அனுப்பப்படுவார். குறைந்த, நடுத்தர மற்றும் அதிகபட்ச பாதுகாப்புள்ள சிறைச்சாலைகள் உள்ளன. சிறையிலுள்ள போது, குற்றவாளியால் ஏற்படக்கூடிய ஆபத்தின் அடிப்படையில் பாதுகாப்பு மட்டம் தீர்மானிக்கப்படுகின்றது. பாலியல் தாக்குதல் அதிகமான அல்லது குறைவான தீவிரமாக இருந்தது என்பது இதன் கருத்தாகாது.

### *மேன்முறையீடுகள் (Appeals):*

நீதிபதி ஒருவர் வழங்கிய விடுதலை, குற்றத்தீர்ப்பு அல்லது தண்டனையைப் பரிசீலிக்கும்படி மேல் நீதிமன்றத்தைக் குற்றம்சுமத்தப்பட்டவர் அல்லது அரசு தரப்புச் சட்டத்தரணி கேட்க முடியும். தண்டனை வழங்கப்பட்ட 30 நாட்களுக்குள் இது கேட்கப்பட வேண்டும்.

மேல் நீதிமன்றம் அந்த மேன்முறையீட்டை விசாரிப்பதற்கு ஒப்புக்கொண்டால், முதல் நீதிமன்றத்தின் தீர்மானம், தீர்ப்பு அல்லது கட்டளையை அந்த நீதிபதி மாற்றக்கூடும் அல்லது முற்றிலும் புதியதொரு நீதிமன்ற விசாரணைக்கு உத்தரவிடக்கூடும். மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீங்கள் சாட்சியமளிக்கத் தேவையில்லை. புதியதொரு நீதிமன்ற விசாரணைக்கு உத்தரவிடப்பட்டால் மட்டும் திரும்பவும் சாட்சியமளிப்பதற்கு நீங்கள் அழைக்கப்படுவீர்கள்.

## நன்நடத்தைப் பிணையில் விடுதலை (Parole) என்றால் என்ன?

ஏழு வருடங்களின் பின்னர் அல்லது அவர்களுடைய தண்டனைக் காலத்தின் மூன்றில் ஒரு பகுதிக்காலம் சென்ற பின்னர், எது முதலில் வருகின்றதோ, அப்போது, தண்டனைக் காலத்துக்கு முன்பான விடுதலைக்கு அனேகமான குற்றவாளிகள் விண்ணப்பிக்க முடியும். குற்றவாளியின் நடத்தை மற்றும் பூர்த்திசெய்த திட்டங்கள் அல்லது சிகிச்சைகளின் அடிப்படையில், நன்நடத்தைப் பிணைக்கான கோரிக்கையை ஏற்றுக்கொள்வதா இல்லையா என நன்நடத்தைப் பிணைச் சபை (Parole Board) முடிவெடுக்கும். நன்நடத்தைப் பிணை நிராகரிக்கப்பட்ட குற்றவாளிகள் ஒவ்வொரு இரண்டு வருடங்களின் பின்னரும் மீள விண்ணப்பிக்க முடியும்.

தண்டனைக் காலத்தின் மூன்றில் ஒரு பகுதிக்காலம் சென்ற பின்னரும், நன்நடத்தைப் பிணைக்கு விண்ணப்பிப்பதற்கு, மத்திய சிறையிலிருக்கும் சில குற்றவாளிகளுக்கு அனுமதி கிடையாது. இப்படியான நிலைமைகளில், நன்நடத்தைப் பிணைக்கு விண்ணப்பிக்க அனுமதியிருப்பின், அது எப்போது என்பதைத் தண்டனை வழங்கும்போது அந்த நீதிபதி முடிவுசெய்வார்.

குற்றவாளி ஒருவருக்கு நன்நடத்தைப் பிணை அனுமதிக்கப்பட்டால், அவர் மேற்பார்வையில்லாமல் சுதந்திரமாக இருக்கலாம் எனப் பொருளாகாது. சிறையிலிருந்து குற்றவாளி விடுவிக்கப்படுவார், பின் குறித்த நிபந்தனைகளுக்கேற்ப, நன்நடத்தைப் பிணை அதிகாரி

ஒருவரின் மேற்பார்வையின் கீழ், மீதியாக அவருக்கு இருக்கும் தண்டனைக் காலத்தில் சமூகத்துக்குச் சேவையாற்றுவார்.

## குற்றவாளி சிறையிலிருந்து எப்போது விடுவிக்கப்படுவார்?

அனேகமான குற்றவாளிகள், தங்களுடைய முழுத் தண்டனைக் காலத்தையும் சிறையில் கழிக்க மாட்டார்கள். அனேகமான சூழ்நிலைகளில், தண்டனைக் காலத்தின் ஒரு பகுதியைக் கழித்தபின்னர், குற்றவாளி ஒருவர் நன்நடத்தைப் பிணையில் விடுதலை செய்யப்படுவார். குறித்த குற்றவாளியின் விடுதலை மற்றும் நன்நடத்தைப் பிணை விசாரணை பற்றி உங்களுக்குத் தெரிவிக்கும்படி நீங்கள் கோரலாம்.

குற்றவாளி ஒருவர், "மாகாணச் சிறையில்" தனது தண்டனைக் காலத்தைக் கழித்தால் - 416-314-2447ஐ அல்லது கட்டணமற்ற இணைப்பை 1-888-579-2888ல் அழைப்பதன்மூலம் பாதிக்கப்பட்டவருக்கான அறிவிப்பு அமைப்பில் நீங்கள் பதிவுசெய்யலாம். பாதிக்கப்பட்டவருக்கான அறிவிப்பு அமைப்பு (Victim Notification service) என்ற விருப்பத் தெரிவைத் தெரிவு செய்யுங்கள்.

குற்றவாளி ஒருவர், "மத்திய சிறையில்" தனது தண்டனைக் காலத்தைக் கழித்தால் - கட்டணமற்ற இணைப்பை 1-800-518-8817ல் அழைப்பதன்மூலம் தேசிய நன்நடத்தைப் பிணைச் சபையில் (National Parole Board) நீங்கள் பதிவுசெய்யலாம்.

நன்நடத்தைப் பிணை விசாரணைகள் பற்றிய அல்லது குறித்த குற்றவாளி இடம்மாற்றப்பட்டிருக்கிறாரா அல்லது விடுதலை

செய்யப்பட்டிருக்கிறாரா என்பது பற்றிய அறிவிப்புகள் உங்களுக்குக் கிடைப்பதை உறுதி செய்வதற்கு, சீர்திருத்தச் சேவைகள் (Correctional Service) கனடாவின் பாதிக்கப்பட்டவர் சேவைகள் பிரிவின் கட்டணமற்ற சேவையை 1-866-806-2275ல், அழையுங்கள்.

## *பாதிக்கப்பட்ட கனேடியரின் உரிமைகள் மசோதா (Canadian Victim Bill of Rights* (CVBR)) **என்றால் என்ன**?

பாதிக்கப்பட்ட கனேடியரின் உரிமைகள் மசோதா (CVBR) என்பது, குற்றச்செயலால் பாதிக்கப்பட்டவர்கள், குற்றவியல் நீதி நடைமுறையின் வெவ்வேறு கட்டங்களில் எப்படி நடத்தப்பட வேண்டும் என்பது பற்றி வழிகாட்டும் கோட்பாடுகளின் ஒரு தொகுப்பாகும்.

குற்றச்செயல் ஒன்றினால் உடல்ரீதியாக அல்லது உணர்ச்சிரீதியாகப் பாதிப்படைந்தவர் அல்லது அதனால் சொத்து சேதம் அல்லது பொருளாதார இழப்பு ஏற்பட்ட ஒருவர், பாதிக்கப்பட்ட ஒருவரென, இந்தச் சட்டம் வரையறுக்கிறது.

குற்றச்செயலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கீழ்வரும் சட்டரீதியான உரிமைகளை CVBR வழங்குகின்றது:

- தகவல்களைப் பெறுவதற்கான உரிமை
- பங்குகொள்வதற்கான உரிமை
- பாதுகாக்கப்படுவதற்கான உரிமை
- மறுவாழ்வுக்கான உரிமை

பாதிக்கப்பட்ட கனேடியரின் உரிமைகள் மசோதா பற்றிய மேலதிக தகவல்களுக்கு (Canadian Victims Bill of Rights)

"குற்றச்செயலினால் பாதிக்கப்பட்டோர் (Victims of Crime)" என்பதை www.canada.caல் தேடிப்பார்க்கலாம்.

## நிதி இழப்பீட்டுகான ஈடு எதற்காவது எனக்குத் தகுதியுள்ளதா?

பாலியல் தாக்குதலிலிருந்து பிழைத்து வாழும் ஒருவருக்கு, நிதிரீதியான நஷ்டஈடு சம்பந்தமாக கீழே பட்டியலிடப்பட்டிருக்கும் சில தெரிவுகள் உள்ளன.

*பாதிக்கப்பட்டோருக்கான விரைவான பதிலளிப்புத் திட்டம் (Victim Quick Response Program (VQRP))*

சட்ட மாஅதிபரின் அமைச்சின் பாதிக்கப்பட்ட சேவைகள் பிரிவு, ரொறன்ரோ பாதிக்கப்பட்ட சேவைகள் (Ministry of Attorney General c/o Victim Services Branch,
Victim Services Toronto)
416-808-7066

காவல்துறையினருக்கு, ஒரு பாலியல் தாக்குதல் நிலையத்துக்கு, வைத்தியசாலைக்கு மற்றும்/அல்லது வேறு சமூக முகவர் நிலையத்துக்கு பாலியல் தாக்குதல் பற்றி அறிவிக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கு, VQRP குறுகிய கால உதவியை வழங்குகின்றது.

மேலதிக தகவல்களுக்கு அல்லது தகுதியுடமை பற்றிய வழிகாட்டல்களைப் பரிசீலிப்பதற்குத் தயவுசெய்து ரொறன்ரோ பாதிக்கப்பட்ட சேவைகளை, 416-808-7066ல் அழையுங்கள்.

*குற்றவியல் பாதிப்புகள் நஷ்டஈட்டுச் சபை (Criminal Injuries Compensation Board (CICB))*

www.cicb.gov.on.ca

1-800-372-7463

பாலியல் தாக்குதல் உள்ளடங்கலான வன்முறைக் குற்றச்செயலால் ஒன்ராறியோவில் பாதிக்கப்பட்டோருக்கு, CICB நஷ்டஈடு வழங்குகின்றது. குற்றம்சுமத்தப்படாமல் அல்லது குற்றவியல் நடைமுறையின்போது, குற்றம் நிரூபிக்கப்படாமல் இருக்கும் சந்தர்ப்பங்களில்கூட நஷ்டஈடு வழங்கப்படலாம். வருமான இழப்பு, காயங்களின் வலி மற்றும் அனுபவிப்புகள் மற்றும்/அல்லது பாலியல் தாக்குதல் ஒன்றின் விளைவாகப் பிறந்த பிள்ளைக்கான ஆதரவுடன், மருத்துவத்துக்கு, சிகிச்சைக்கு மற்றும்/அல்லது ஆற்றுப்படுத்துகைச் செலவுகளுக்கும் CICB நஷ்டஈடு வழங்கக்கூடும்.

## ரொறன்றோவில் உதவி மற்றும் ஆற்றுப்படுத்துகையை எங்கே நான் பெறலாம்?

பாலியல் தாக்குதலின் பின்னர், புலன்விசாரணையின்போது, மற்றும் நீதிமன்ற விசாரணையின் பின் உங்களுக்குப் பல ஆதாரவளங்கள் கிடைக்கும். ஆதரவு தேவைப்படும் அனைவருக்கும் ஆதரவு கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்காக, பல முகவர் நிலையங்களுடன் சேர்ந்து ரொறன்ரோ காவல்துறைச் சேவை செயல்படுகின்றது.

இந்த ஆதரவு நிலையங்களில் வேலைசெய்பவர்கள் காவல்துறை அதிகாரிகள் அல்ல.

### *ரொறன்ரோ பாதிக்கப்படுவோர் சேவைகள் (Victim Services Toronto)*

ரொறன்ரோ பாதிக்கப்படுவோர் சேவைகள் என்பது, குற்றச்செயலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கு உறுதிபூண்டுள்ள ஒரு இலாபகரமற்ற நிறுவனமாகும். பொறுப்பான, அணுகத்தக்க, பதிலளிப்புச் சேவைகளையும் திட்டங்களையும் அவர்கள் வழங்குகிறார்கள். பாதிக்கப்பட்டவரின் வாழ்க்கைத் தரத்தை மீளப்பெற்றுக் கொடுப்பதிலும், மேம்படுத்தலிலும், மற்றும் திரும்பவும் பாதிக்கப்படாமல் தடுப்பதிலும் அவர்கள் கவனம் செலுத்துகின்றனர்.

24/7 செயல்படும் அந்த இடத்தில், உடனடி ஆதரவு மற்றும் நெருக்கீட்டில் இடையீடு கிடைக்கின்றது. ஆற்றுப்படுத்துகை, சட்டஆலோசனை, வன்முறைத் தடுப்பு, பாதுகாப்புச் சேவைகள் போன்றவற்றுக்காக உங்களுடைய சமூகத்திலுள்ள முகவர் நிலையங்கள் மற்றும் ஆதாரவளங்களுடன் அவர்கள் உங்களைத் தொடர்புபடுத்துவார்கள்.

40 College Street

Toronto, Ontario, M5G 2J3

416-808-7066

மின்னஞ்சல்: info@victimservicestoronto.com

வலைத்தளம்: www.victimservicestoronto.com

### *பாதிக்கப்பட்டோர், சாட்சி உதவித் திட்டம் (Victim Witness Assistance Program (VWAP))*

குற்றச்செயலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்கும் நீதிமன்ற நடைமுறை தொடர்பான தகவல்கள், உதவி மற்றும் ஆதரவை VWAP வழங்குகின்றது. மாகாணம் முழுவதுமுள்ள நீதிமன்றங்களில் VWAP அமைந்துள்ளது. உங்களுக்கு அருகில் இருக்கும், VWAP அலுவலகம் உள்ள நீதிமன்றத்தைக் கண்டறிவதற்குத் தொலைபேசிப் புத்தகத்தைப் (நீலப்பக்கங்களில், "நீதிமன்றங்கள் (Courts) "என்பதன் கீழ் அனைத்து நீதிமன்றங்களும் பட்டியலிடப்பட்டுள்ளன) பாருங்கள். சட்ட மாஅதிபரின் அமைச்சு வலைத்தளத்தையும் நீங்கள் பார்வையிடலாம்: www.ontario.ca/attorneygeneral

*பாலியல் தாக்குதல் குடியியல் சட்டத்தரணி (Civil Sexual Assault Lawyer)*

பிள்ளைப்பராயப் பாலியல் துன்புறுத்தல் மற்றும் வளர்ந்தோரில் பாலியல் தாக்குதல் என்பவற்றிலிருந்து பிழைத்து வாழ்பவர்களுக்காக வாதிடும் சட்டத்தரணிகள் உள்ளனர். பாலியல் தாக்குதல் குடியியல் சட்டத்தரணியை அமர்த்துவதன் நோக்கம் நிதி இழப்புக்கான ஈட்டைப் பெறுவதற்காகும். அந்தக் குற்றவாளி மேலும், நிறுவனம் ஒன்று அதில் சம்பந்தப்பட்டிருந்தால் அந்த நிறுவனத்தின் மேலும் நீங்கள் வழக்குத் தொடரலாம்.

குறிப்பிட்ட சட்டத்தரணி ஒருவரை உங்களுக்காகப் பரிந்துரைக்க முடியாத நிலையில் ரொறன்ரோ காவல்துறையினர் உள்ளனர். சட்டத்தரணி ஒருவரை நீங்கள் தொடர்புகொள்ள விரும்பினால், இந்தக் கையேட்டில் பட்டியலிடப்பட்டிருக்கும் ஆதாரவளங்களைப் பார்க்கலாம் அல்லது கீழே பட்டியலிடப்பட்டிருக்கும் முகவர் நிலையங்களைத் தொடர்புகொள்ளலாம். நீதிமன்ற

நடைமுறையின்போது குற்றம்சுமத்தப்பட்டவர் குற்றவாளி அல்ல என கண்டறியப்பட்டாலும் நிதி இழப்புக்கான ஈட்டுக்காக குடியியல் சட்டத்தரணி ஒருவருடன் நீங்கள் தொடர்ந்தும் செயற்படலாம்.

*The Law Society of Upper Canada*

(சட்டத்தரணி பரிந்துரைப்புச் சேவை)

416-947-3330

1-800-268-8326 (கட்டணமற்ற இணைப்பு)

www.lsuc.on.ca

Ontario Trial Lawyers Association (ஒன்ராறியோ நீதிமன்ற விசாரணைச் சங்கம்)

905-639-6852

1-800-567-3047 (கட்டணமற்ற இணைப்பு)

www.otla.com

*Crisis Lines (நெருக்கீடு இணைப்புகள்)*

அழையுங்கள் 2-1-1

www.211toronto.ca

Toronto Rape Crisis Centre/Multicultural Women Against Rape

(ரொறன்ரோ வன்புணர்வு நெருக்கீடு மையம்/ வன்புணர்வுக்கு எதிரான பல்கலாச்சாரப் பெண்கள்

24 மணி நேர நெருக்கீடு இணைப்பு: 416-597-88058

crisis@trccmcwar.ca

*மருத்துவரீதியானவை*

Women’s College Hospital (பெண்கள் கல்லூரி மருத்துவமனை)
Sexual Assault Domestic Violence Care Centre (பாலியல் தாக்குதல் வீட்டு வன்முறைப் பராமரிப்பு மையம்)
76 Grenville Street
Toronto, Ontario M5S1B2
416-323-6040
www.womenscollegehospital.ca/programs-and-services/sexual-assault-domestic-violence-care-centre

Scarborough Hospital Birchmount Campus (ஸ்காபொரோ மருத்துவமனை பேர்ச்மௌன்ட் வளாகம்)
Sexual Assault Domestic Violence Care Centre (பாலியல் தாக்குதல் வீட்டு வன்முறைப் பராமரிப்பு மையம்)
3030 Birchmount Road
Toronto, Ontario, M1W 3W3
416-495-2555
www.sacc.to

Sexual Assault/Domestic Violence Care Centre (பாலியல் தாக்குதல் வீட்டு வன்முறைப் பராமரிப்பு மையம் (SA/DVCC))
(416) 314-2447
1 (888) 579-2888 (கட்டணமற்ற இணைப்பு)
www.sadvtreatmentcentres.net

Sick Kids Hospital (நோய்வாய்ப்பட்ட குழந்தைகளுக்கான மருத்துவமனை)
Suspected Child Abuse and Neglect Program (சந்தேகத்துக்குரிய பிள்ளை துன்புறுத்தல் மற்றும் புறக்கணிப்புத் திட்டம் (SCAN))
555 University Avenue
Room 6427, Black Wing
Toronto, Ontario, M5G1X8
(416) 813-6275 (பகல் நேரம்)
(416) 813-7500 (24 மணி நேரம்)
www.sickkids.ca/scan

Mount Sinai Hospital (மௌன்ட் சினாய் மருத்துவமனை)
Clinic for HIV Related Concerns (HIV தொடர்பான கரிசனைகளுக்கான சிகிச்சையகம்)
600 University Avenue, Room 963
Toronto, Ontario, M5G 1X5
(416) 586-4800 (extension 8714)
www.mountsinai.on.ca/care/psych/patient-programs/hiv-clinc

Mount Sinai Hospital (மௌன்ட் சினாய் மருத்துவமனை)
Trauma Clinic (பேரதிர்ச்சிச் சிகிச்சையகம்)
600 University Avenue, Room 963
Toronto, Ontario, M5G 1X5
(416) 586-4800 (extension 8714)
www.mountsinai.on.ca/care/psych/patient-programs/trauma-clinic

*ஆற்றுப்படுத்துகை*

Barbra Schlifer Clinic – பெண்கள் மட்டும்
489 College Street
Toronto, Ontario, M6G 1A5
416-323-9149
www.schliferclinic.com

Egale Canada Human Rights Trust (ஈகல் கனடா மனித உரிமைகள் அறக்கட்டளை)
185 Carlton Street
Toronto, Ontario, M5A 2K7
416-906-7887
www.egale.ca

Elder Abuse Ontario (ஒன்ராறியோ முதியோர் துன்புறுத்தல்)
2 Billingham Road Suite 306
Toronto, Ontario, M9B 6E1
416-916-6728
www.elderabuseontario.com
info@elderabuseontario.com

Family Services Toronto (ரொறன்ரோ குடும்பச் சேவைகள்)
128 A Sterling Road
Toronto, Ontario, M6P 0A1

(416) 595-9230

www.familyservicetoronto.org

Metropolitan Action Committee on Violence Against Women and Children (பெண்கள் மற்றும் பிள்ளைகளுக்கு எதிரான வன்முறைக்கான மாநகரச் செயல்பாட்டுக் குழு (METRAC)) – பெண்கள் மட்டும்

158 Spadina Road

Toronto, Ontario, M5R 2T8

(416) 392-3135

info@metrac.org

www.metrac.org

Scarborough Shoniker Clinic (ஸ்காபொரோ ஷோனிகர்சிகிச்சையகம்)

2877A Ellesmere Road

Scarborough, Ontario, M1E 4C1

(416) 281-7301

www.rougevalley.ca/shoniker-clinic

Sherbourne Health Centre (ஷேபோர்ன் ஆரோக்கிய நிலையம்)

333 Sherbourne Street

Toronto, Ontario, M5A 2S5

www.sherbourne.on.ca

info@sherbourne.on.ca

The Gatehouse (த கேட் ஹவுஸ்)

3101 Lake Shore Boulevard West

Toronto, Ontario, M8V 3W8

(416) 255-5900

www.thegathehouse.org

Toronto Rape Crisis Centre/Multicultural Women Against Rape (ரொறன்ரோ வன்புணர்வு நெருக்கீடு நிலையம்/ வன்புணர்வுக்கு எதிரான பல்கலாச்சாரப் பெண்கள் (TRCC/MWAR)) – பெண்கள் மட்டும்

(416) 597-1171

www.trccmwar.ca

info@trccmcwar.ca

Toronto Trans Alliance (ரொறன்ரோ ட்ரான்ஸ் அலயன்ஸ்)

www.torontotransalliance.com

Boost CYAC(பூஸ்ட் குழந்தை மற்றும் இளைஞர் ஆலோசனை மையம்)

890 Yonge Street

Toronto, Ontario, M4W 3P4

(416) 515-1100

info@boostforkids.org

www.boostforkids.org

Covenant House (கொவ்னன்ட் மனை)

20 Gerrard Street East

Toronto, Ontario, M5B 2P3

416-598-4898

www.covenanthousetoronto.ca

East Metro Youth Services (கிழக்குப் பெருநகர இளைஞர் சேவைகள்)

1200 Markham Road

Scarborough, Ontario, M1H 3C3

416-438-3697

www.emys.on.ca

*குறிப்பிட்ட கலாச்சாரத்துக்கானது*

Abrigo Centre

1645 Dufferin Street

Toronto, Ontario, M6H 3L9

416-534-3434

www.abrigo.ca

Butterfly Asian & Migrant Sex Workers Support Network (ஆசிய & குடிபெயர்ந்த பாலியல் தொழிலாளர் ஆதரவு வலையமைப்பு

416-906-3098

www.butterfly.sw.org

cswbutterfly@gmail.com

Centre francophone de Toronto(ரொறன்ரோ பிரெஞ்சு பேசுவோர் மையம்)
555 Richmond Street West
Toronto, Ontario, M5V 3B1
416-922-2672
www.centrefranco.org
infos@centrefranco.org

Chinese Family Services of Ontario (ஒன்ராறியோ சீனக் குடும்ப சேவைகள்)
3330 Midland Avenue, Suite 229
Scarborough, Ontario, M1V 5E7
416-979-8299
www.chinesefamilyso.com
info@chinesefamilyso.com

Native Women's Resource Centre, Sexual Assault Care Centre – (பழங்குடிப் பெண்கள் ஆதாரவள நிலையம், பாலியல் தாக்குதல் பராமரிப்பு நிலையம்) – பெண்கள் மட்டும்
191 Gerrard Street East
Toronto, Ontario, M5A 3E5
416-963-9963
www.nwrct.ca
info@nwrct.ca

Rexdale Women's Center
(Rexdale பெண்கள் நிலையம்) – பெண்கள் மட்டும்
925 Albion Road, Suite 309
Toronto, Ontario, M9V 1A6
416-745-0062
www.rexdalewomen.org

Riverdale Immigrant Women's Center

(Riverdale குடிபெயர்ந்த பெண்கள் நிலையம்) – பெண்கள் மட்டும்
1326 Gerrard Street East
Toronto, Ontario, M4L 1Z1
416-465-6021
www.riwc.ca

South Asian Legal Clinic of Ontario
(ஒன்ராறியோவின் தெற்காசிய சட்ட மையம்)
45 Sheppard Avenue East Suite 106A
North York, Ontario, M2N 5W9
416-487-6371
www.salc.on.ca

South Asian Women's Centre
(தெற்காசியப் பெண்கள் நிலையம்) – பெண்கள் மட்டும்
800 Lansdowne Avenue Suite 1
Toronto, Ontario, M6H 4K3
416-537-2276
www.sawc.org
info@sawc.org

The Centre for Spanish Speaking Peoples
(ஸ்பானிய மொழிபேசுவோருக்கான நிலையம்)
2141 Jane Street, 2nd Floor
Toronto, Ontario, M3M 1A2

416-533-8545

www.spanishservices.org

info@spanishservices.org

The Centre OASIS des femmes – பெண்கள் மட்டும்

465 Yonge Street

Toronto, Ontario, M4Y 1X0

416-591-6565

www.oasisfemmes.org

services@oasisfemmes.org

West Neighbourhood House (வெஸ்ட் நேபர்ஹூட் ஹவுஸ் )

248 Ossington Avenue

Toronto, Ontario, M6J 3A2

416-532-4828

www.westnh.org

info@westnh.org

Women's Health in Women's Hands
(பெண்களின் ஆரோக்கியம் பெண்களின் கைகளில்) – பெண்கள் மட்டும்

2 Carlton Street Suite 500

Toronto, Ontario, M5B 1J3

416-593-7655

www.whiwh.com

info@whiwh.com

*ஏனைய ஆதாரவளங்கள்*

Canadian Centre for Abuse Awareness

(துன்புறுத்தல் விழிப்புணர்வுக்கான கனடிய நிலையம் (CCAA))

(905) 967-0687

www.abusehurts.ca

Courtprep

(நீதிமன்றத்துக்கு தயார்படுத்தல்)

www.courtprep.ca

Victims Matter

(பாதிக்கப்பட்டவர்கள் விடயங்கள்)

www.victimsmatter.gc.ca